## 11.4 மாநில நிதி ஆணையத்தின் நிதி ஆதாரங்கள் பெருக்குதல் குறித்தான பரிந்துரைகள் மீது அரசின் முடிவுகள்

ஊரக வளர்ச்சி (சி2) துறை

அரசாணை (நிலை) : 137 நாள் : 2.5.1997

படிக்க :

அரசு ஆணை (நிலை) எண். 380 நிதி (வழங்கல்) துறை நாள் 23.4.94.

**ஆணை**

இந்திய அரசமைப்பின் 73 மற்றும் 74–வது திருத்த சட்டம் 24.4.93 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்திய அரசமைப்பு (73 வது திருத்தச்) சட்டத்தின் பிரிவுக்கூறு 243–ஐக்கு இணைங்க இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஓராண்டுக்குள்ளும், அதன் பின்னர் ஐந்து ஆண்டுக்கு ஒரு முறையும், ஊராட்சிகளில் நிதி நிலையை ஆராய்ந்து பரிநதுரைகள் செய்ய நிதி ஆணையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அவ்வாணையம் மாநிலங்களால் விதிக்கப்படும் வரிகள், தீர்வை (Duties) சுங்கம் மற்றும் கட்டணங்கள் ஆகியவைகளை மாநில அரசுக்கும் ஊராட்சிகளுக்கும் இடையேயும், பின்னர் பரவலாக்கப்பட்ட ஊரக மன்றங்களுக்கு இடையிலும் எந்த அடிப்படையில் பிரித்தல் மற்றும் ஒதுக்கீடு செய்தல் என்பதைப் பற்றியும், ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய வரிகள், தீர்வைகள், சுங்கம் மற்றும் கட்டணங்கள் நிர்ணயித்தல் பற்றியும், ஊராட்சிகளுக்கு மான்யங்கள் வழங்குதல் பற்றியும் பரிந்துரைக்க வேண்டும். மேற்கூறியதற்கிணங்க பார்வையில் உள்ள அரசாணையில் உள்ளாட்சி மன்றங்களுக்கான நிதி ஆணையம் (State Finance Commission) அரசினால் அமைக்கப்பட்டது.

2. மாநில நிதி ஆணையம் தம்முடைய அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது. ஐந்து பகுதிகளை கொண்ட அவ்வறிக்கையில் பகுதி–2–ல் (நிதி ஆதாரங்கள் பெருக்குதல்) உள்ள பரிந்துரைகள் அரசினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. ஆய்வுக்குப் பின்னர் அப்பரிந்துரைகளில் பிற்சேர்க்கை 1ல் தரப்பட்டுள்ள பரிந்துரைகள் அனைத்தும் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பிற்சேர்க்கை 2 ல் உள்ள பரிந்துரைகளை அரசினால் ஏற்கப்படவில்லை. மேலும் பரிசீலிக்கப்பட வேண்டிய பரிந்துரைகளின் விவரங்கள் பிற்சேர்க்கை 3 ல் தரப்பட்டுள்ளன.

3. பகுதி 3 மற்றும் 4 ல் உள்ள பரிந்துரைகள் தனியாகப் பரிசீலிக்கப்படும்.

4. அரசு ஆணையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீது உரிய நடவடிக்கைகளை ஊரக வளர்ச்சி இயக்குநரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. பிற்சேர்க்கை 3 மற்றும் மாநில நிதி ஆணையத்தின் அறிக்கை பகுதி 3 மற்றும் 4–ல் உள்ள பரிந்துரைகளைப் பரிசீலித்து உரிய செயற்குறிப்புகளை அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 93/ து.செ(வ.செ)/97, நாள் 21.3.97.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்

## பிற்சேர்க்கை – 1

## அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்

**2.5.16 உள்ளூர் செஸ் மேல்வரி**

2.5.16.1 தற்போது செயலிலுள்ள உள்ளூர் செஸ் மேல் வரி வீதமே தொடர்ந்து விதிக்கப்படலாம். முடிந்த அளவுக்கு இந்த வரி வீதங்களை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஊக்கமளிக்கலாம்.

2.5.16.4 சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு, உள்ளூர் செஸ் மேல் வரி, ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் தான் வரவு வைக்கப்பட வேண்டும். தற்போது உள்ளது போல் ஊராட்சி ஒன்றியங்களில் தனி 'கல்வி நிதிக் கணக்கு' தேவையில்லாததால், 'கல்வி நிதிக் கணக்கில்' தொகை செலுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்ட நிருவாக உத்தரவுகள் திரும்பப் பெறப்படலாம். பள்ளிக் கட்டிடங்கள் பொது நிதியைக் கொண்டே பராமரிக்கப்படலாம்.

2.5.16.5 கீழ் நிலைகளில் தற்போது காணப்படும் காலதாமதத்தைக் குறைப்பதற்காக, ஊராட்சி ஒனறியங்களுக்கான வருவாயைச் சரிக்கட்டுவது குறித்து மாவட்ட மற்றும் மாநில அளவுகளில் முறையான மாதாந்திர ஆய்வை வருவாய் அதிகாரிகள் மேற்கொள்ளலாம் என்று வரையறுக்கப்படலாம்.

**குறிப்பு**
மாதாந்திர ஆய்வைவிட மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்,

**2.5.25 உள்ளூர் செஸ் வரி**

உள்ளூர் செஸ் வரியைக் கீழ்க்கண்ட மூன்று வழிகளில் பகிர்வு செய்ய மாநில நிதி ஆணையம் பரிந்துரைக்கிறது.

2.5.25.1 (i) ஊராட்சி ஒன்றியங்களுக்கு, உள்ளூர் செஸ் மேல் வரி வாயிலாகக் கிடைக்கும் வருமானம் கணிசமாக அதிகரித்துள்ளதால், உள்ளூர் செஸ் வரி முழுவதும் ஊராட்சிகளுக்கு அளிக்கப்படலாம்.

2.5.25.1 (ii) மாவட்டத்தில் ஊராட்சி ஒனறியங்களுக்குச் சேர வேண்டிய உள்ளூர் செஸ்வரியில் 25 விழுக்காடு சம்பந்தப்பட்ட மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு பிரித்தளிக்கப்படலாம்.

2.5.25.1 (iii) ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் உள்ளூர் செஸ் வரியில் 25 விழுக்காட்டை நிர்ணயிக்கப்பட்ட ஒரு வரைமுறையின் அடிப்படையில் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு பிரித்தளிப்பதற்காக, மாநில அளவிலான பொதுத் தொகுப்பில் சேர்க்கலாம்.

**குறிப்பு**
உள்ளூர் செஸ் வரி முழுவதும் ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.

2.5.25.2 சராசரி நிலவரி கேட்புத் தொகையின் அடிப்படையில், உள்ளூர் செஸ் மேல் வரியை எளிமையாகவும், முறையாகவும், சரிக்கட்டுவதற்காக மாநில நிதி ஆணையம் செய்த பரிந்துரைகள், உள்ளூர் செஸ் வரிக்கும் பின்பற்றப்படலாம்.

2.5.25.3 ஊராட்சிகளுக்குச் சேரவேண்டிய உள்ளூர் செஸ் வரியை ஊராட்சி ஒன்றிய பொது நிதி மூலம் வழங்குவதற்குப் பதிலாக நேரடியாக ஊராட்சி தொகுப்பு நிதியில் வரவு வைக்கலாம்.

**2.5.27 கேளிக்கை வரி**

2.5.27.1 ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்குமிடையே தற்போது பின்பற்றப்பட்டு வரும் நிதிப் பகிர்வு முறையை மாற்றுவதற்குப் போதிய நியாயமில்லை.

2.5.27.2 இவ்வரி, 1954 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி வரி விதிப்பு விசாரணைக் கமிஷனால் உள்ளூர் வரி விதிப்பாக வகைப்படுத்தப் பட்டுள்ளது. எனவே ஏற்கனவே, ''மாநகராட்சிகள்'' தொடர்பாக பரிந்துரைக்கப்பட்டதைப் போன்று, மொத்த வருவாயும் உள்ளாட்சி மனற்ங்களுக்கே அளிக்கப்படலாம். இத்தகைய நேர்வில், வருவாய், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்குமிடையே 30:70 என்ற விகிதத்தில் பிரித்துக் கொள்ளப்படலாம்.

**2.5.33 சுரங்கங்களும் கனிமங்களும்**

2.5.33.1 பல ஆண்டுகளாக கனிம வளங்கள் தொடர்பாக உள்ளாட்சி மன்றங்களுக்குச் சேர வேண்டிய வருவாயைச் சரிக் கட்டுவதில் தவிர்க்கத்தக்க காலதாமதம் ஏற்பட்டு வருவதாக அறியப்படுகிறது. இவ்வருவாய் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள உதவி இயக்குநரால் (சுரங்கங்கள்) மாவட்ட அளவில் மட்டுமே சரிக்கட்டப்பட வேண்டும். வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு இடர்ப்பாடு ஏதுமில்லை. இவ்வருமானம், உள்ளாட்சி மன்றங்களின் முக்கியமான வருவாய் இனங்களுள் ஒன்றாகும். உள்ளாட்சி மன்றங்களுக்குச் சரிக்கட்ட வேண்டிய நிலுவை, ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ.25 கோடிக்கும் அதிகமாகவே இருக்கும். கடந்த ஐந்தாண்டுகளில் இத்தொகை ரூ.125 கோடியைத் தாண்டியிருக்கும். இந்நிலுவைத் தொகையை மாவட்ட அதிகாரிகள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு உடனடியாக வழங்கலாம்.

**குறிப்பு**

நிலுவை இந்த அளவிற்கு இல்லை என கருதப்படுகிறது. என்றாலும், எந்த அளவில் நிலுவை உள்ளதோ, அதனை விரைவில் ஊராட்சி மன்றங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கலாம்.

**2.5.51 மகப்பேறு மையங்கள்**

உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படை செய்ய வேண்டிய பணிகள் முடிவு செய்யப்படும் வரை ஆயாக்கள் தொடர்பாக ஏற்படும் செலவு முழுவதையும் அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியமாகத் திருப்பி அளிப்பதுடன் அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரை ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களாகத் தொடர்ந்து இருக்க வேண்டும்.

**2.5.55 நீர்ப்பாசன மான்யம்**

பழுதுபார்ப்பு பணியை மேற்கொள்வதற்காக முறையானதொரு சுழற்சி முறை வகுக்கப்படலாம், இவற்றைப் பராமரிப்பதற்கு ஆண்டொன்றுக்காகும் தொகை மதிப்பிடப்பட்டு, ஐந்தாண்டுகளுக்கான பராமரிப்பு மாளியம் முன்னரே தெரியும் முறையில் அளிக்கப்படலாம்.

**2.6.16 வீட்டுவரி**

2.6.16.1 கட்டிட பரப்பின் அடிப்படையிலான தற்போதைய நேரடி வரி வீதங்கள் மாறாமல் இருக்குமாதலால் மதிப்பின் அடிப்படையில் இனி சீராய்வுகள் செய்ய இயலாது என்பதாலும், கட்டிடப்பரப்பு அடிப்படையிலான வாடகை மதிப்பின் பேரில் திருத்த வீதம் இணைப்பு எண். 16–ல் குறிப்பிட்டபடி பின்பற்றப்படலாம். அத்துடன், நூலக வரி விதிப்பதைப் போலவே ஊராட்சிகளின் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கல் மற்றும் பராமரிப்புச் செலவுக்காக கூடுதலாக மேல் வரி அரசு நிர்ணயிக்கும் வீதத்தில் வசூலிக்கலாம்.

**குறிப்பு**

வரிவிதிப்புக்கான பரிந்துரையினை ஏற்க்கப்படுகிறது. ஆனால் தொலைக்காட்சிப் பெட்டிக்காக கூடுதல் வரிவிதிக்கத் தேவையில்லை.

2.6.16.9 வீட்டு வரியைத் திருத்தியமைத்தல், மற்றும் மேல் முறையீடு செய்தல் தொடர்பாக ஊராட்சிகளில் தற்போது பின்பற்றப்பட்டுவரும் நடைமுறை தொடர்ந்து இருக்கலாம்.

2.6.35 முத்திரைத்தாள் வரி மேல் வரி

2.6.35.2 முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல் வரியைப் பகிர்ந்தளிப்பதற்கான நடைமுறையில் மாற்றம் ஏதேனும் செய்ய வேண்டுமாயின் அதற்காக தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தைத் திருத்த வேண்டியிருக்கும். மக்கள் தொகை அடிப்படையில் பகிர்ந்தளிப்பதனால் தற்போது பல்வேறு ஊராட்சிகளுக்குக் கிடைக்கும் தொகையை அது வெகுவாகப் பாதிக்கக் கூடும். எனவே, நிலவரி வருவாய் அடிப்படையிலான தற்போதைய நடைமுறையே தொடந்திருக்கலாம்.

2.6.35.4 தற்போது அனுமதிக்கப்படும் தொகை, முதற்கண் ஊராட்சி ஒன்றிய நிதிகளில் வரவு வைக்கப்படுகிறது. பிறகு, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பல்வேறு ஊராட்சிகளுக்குச் சேர வேண்டிய தொகையைக் கணக்கிட்ட பிறகு அதனை ஊராட்சிக் கணக்கிற்கு மாற்றுகிறார். இத்தொகை ஊராட்சிக்

கணக்குகளில் நேரடியாக சரிக்கட்டப்படலாம். ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொரு ஊராட்சிக்கும் சேர வேண்டிய தொகையைக் கணக்கிட்டு அந்தந்த ஊராட்சிக் கணக்குகளில் வரவு வைக்கலாம்.

**2.6.59 மேம்பாட்டு மான்யங்கள்**

2.6.59.1 ஊராட்சிகளுககு வழங்கப்படும் மானியங்களை ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு அம்மாவட்ட அதிகாரிகளே அவற்றை ஊராட்சி நிதிகளில் நேரடியாக சரிக்கட்டலாம்.

2.6.59.2 உள்ளாட்சி மன்றங்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டால், அவை மானியத்திற்கென்று குறிப்பிடப்பட்ட நோக்கங்களை விடுத்து, அப்பகுதியில் முன்னுரிமைத் திட்டங்களுக்கு இந்நிதியைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும். இது அரசு உயர் மட்ட அளவில் எடுக்கப்பட வேண்டிய கொள்கை முடிவாகும்.

**குறிப்பு**

(1) மற்றும் (2) வளர்ச்சித் திட்டங்கள் பெரும்பாலும் மத்திய அரசின் நெறிமுறைகளுக்கு இணங்க செயல்படுத்தப்படுகின்றன. இப்பரிந்துரைகளும் அவைகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்படும்.

**2.6.61 ஆதாயம் தரத்தக்க திட்டங்கள்**

2.6.61.1 அதிக மக்கள் தொகை கொண்ட அல்லது, அதிக வருவாய் உள்ள ஊராட்சிகளில் அரசின் நிதி உதவியைக் கொண்டு கடைகள், அங்காடிகள், பேருந்து நிலையங்கள் சிறு கடைகள், சமுதாய மையங்கள் போன்ற ஆதாயம் தரத்தக்க திட்டங்களை மேற்கொள்ள ஊக்கம் அளிக்கப்படலாம்.

2.6.61.2 இந்நிதி உதவியானது நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் இருப்பது போல், முற்றிலும் கடன் அடிப்படையில் இருக்கக் கூடாது, மாறாக மானியம் மற்றும் கடன் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும்.

2.6.61.3 தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் மேற்பார்வை பணி தவிர மற்றபடி திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான உரிமை ஊராட்சிகளிடமே விட்டு விடப்பட வேண்டும். இந்த அம்சங்கள் பற்றி மாநகராட்சிகள் என்பதன் கீழ் விவாதிக்கப்பட்டுள்ளன. அவற்றை ஊராட்சிகளுக்கும் விரிவுபடுத்தலாம். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், பணிகளின் செயலாக்கம் ஏலம் மற்றும் தொடர்புடைய ஏனைய பணிகள் ஆகியவற்றில் ஆதாயம் தரத்தக்க திட்டங்களைப் பொறுத்தவரை தொடர்பு அதிகாரியாகவும் மேற்பார்வை அதிகாரியாகவும் செயல்படுவார்.

**குறிப்பு**

தற்போது கிராமப்புறங்களிலுள்ள ஊராட்சிகளுக்கு இத்திட்டம் அமுலில் இல்லை. அந்த ஊராட்சிகளில் இதுபோன்ற திட்டங்கள் உருவாக்கப்படும் போது இவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

**பிற்சேர்க்கை – 2**

**அரசால் ஏற்கப்படாத மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்**

**2.5.16 உள்ளூர் செஸ் மேல்வரி**

2.5.16.2 ஊராட்சி ஒன்றியங்களுக்கான வருவாயைச் சரிக்கட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்படலாம். தண்ணீர்த் தீர்வை, அபராதங்கள், ஆக்கிரமிப்புக் கட்டணம் போன்று நிலவரியாக வகைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து இனங்களையும் உள்ளடக்கி, ஒருங்கிணைந்த நிலவரி விதிக்கப்படுவதால், வட்ட அலுவலகக் கணக்குகளிலிருந்து உள்ளூர் செஸ் வரி உள்ளூர் செஸ் மேல்வரி என்பதன் கீழ் வருவாயை எளிதில் சரிக் கட்டுவதற்காக திருத்தப்பட்ட நடைமுறை பின்பற்றப்படலாம். அடிப்படை நிலவரியில் பல ஆண்டுகளாக பெரிய அளவில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. சராசரி நிலவரி ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கணக்கிடப்படலாம். உள்ளூர் செஸ் மேல் வரியும் அவ்வாறே கணக்கிடப்படலாம். அடுத்த ஐந்தாண்டுகளில் வழங்கப்படவேண்டிய உள்ளூர் செஸ்வரி ஒப்படைப்புக்கு அடிப்படையாகக் கொள்ளப்படலாம். இதை கேட்பு மற்றும் வசூலோடு தொடர்பு படுத்தத் தேவையில்லை. வளர்ச்சி வட்டாரங்களின் திருத்திய வகைப்பாட்டினை வரையறுப்பதற்காக மாநில நிதி ஆணையம் தற்போது கணக்கிட்டுள்ள சராசரி நிலவரி அடுத்த ஐந்தாண்டுகளுக்கான சரிக்கட்டல்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படலாம். எனினும், வசூலில் ஏற்படும் குறையை ஈடுகட்டுவதற்கு, கழிவு அனுமதிக்கப்படலாம். எனவே, சராசரி நிலவரி கேட்புத்தொகையின் அடிப்படையில் , கணக்கிடப்பட்ட உள்ளூர் செஸ் மேல் வரியில் 85 அல்லது 90 விழுக்காட்டினை வழங்குவதென அரசு முடிவு செய்யலாம். ஒவ்வோராண்டும் வசூலான தொகையின் அடிப்படையில் சரிக்கட்டல் செய்யவேண்டிய அவசியமில்லை. புள்ளிவிவரங்களில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைச் சரிக்கட்ட, சராசரி கேட்புத் தொகையில் அனுமதிக்கப்படும் 10 அல்லது 15 விழுக்காட்டுக் கழிவை அரசு வைத்துக் கொள்ளலாம். இது அரசுக் கணக்கிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு முறையாக வருவாய் சரிக்கட்டப்படுவதை உறுதி செய்யும். வசூல் அளவு 85 அல்லது 90 விழுக்காட்டிற்கு குறையாமலிருப்பதை உறுதி செய்யுமாறும் வசூல் அதிகாரிகள் உந்தப்படவேண்டும்.

**2.5.27 கேளிக்கை வரி**

2.5.27.3 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் கேளிக்கை வரியைச் சரிக்கட்டுவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைப் பின்வரும் முறையில் தவிர்க்க இயலும். உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல்வரி, முத்திரைத்தாள் மீதான மேல் வரி மற்றும் சுரங்கங்கள் கனிமப் பொருள்கள் வருவாய் போன்ற ஏனைய அனைத்து ஒப்படை வருவாய்களின் நேர்வில் பின்பற்றப்படுவதைப் போன்று மாநில வருவாய் வரவு செலவுத் திட்டத்தில் அந்தந்த வருவாய்த் தலைப்புகளின் கீழ் 'கழிக்கவும் திருப்பிச் செலுத்தப்படுபவை' என்பதன் கீழ் இத்தொகையைக் கட்டலாம். ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சேர வேண்டிய தொகையை, ஊராட்சிகளுக்கு சரிக்கட்டுவதற்கு ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதி வழியாக தொகை முழுவதையும் வழங்குவதற்குப் பதிலாக இந்நிதி நேரடியாக ஊராட்சி தொகுப்பு நிதியில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் வரவு வைக்கலாம்.

**2.5.33 மற்றும் 2.5.34 சுரங்கம் மற்றும் கனிமம்**

2.5.33.2 உள்ளாட்சி மன்றங்களுக்கு உரிய நேரத்தில் தொகையைச சரிக்கட்டுவதற்கு பின்வரும் எளிய நடைமுறை பின்பற்றப்படலாம்.

குத்தகை உறுதி செய்து ஆணை பிறப்பிக்கப்படும் அனைத்து இனங்களிலும், அவ்வாறு குத்தகைகள் உறுதி செய்யப்பட்டவுடன் மாவட்ட ஆட்சியர் தொகையைச் சரிக்கட்டலாம். அதே சமயத்தில் குத்தகைய உறுதி செய்து பிறப்பிக்கப்படவுள்ள ஆணைகளில், கனிமங்களை வெட்டுவதற்கு அனுமதி அளிப்பதற்கு முன் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களில் (ஊராட்சி ஒன்றியக் குழு) இறுதி செய்யப்பட்ட தொகையை செலுத்தி ரசீதை தாக்கல் செய்ய வேண்டுமென சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்திரவிடலாம். உரிமம் அல்லது அனுமதியின்படி கனிமம் வெட்டியெடுக்கப்படுகிறதா என்பதை மேற்பார்வை செய்து அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக வெட்டியெடுக்கப்பட்டால், அதனை கவனத்திற்குக் கொண்டு வர உள்ளூர் தலைவர்களுக்கும் வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கும் அனுமதி அளிக்கப்படலாம்.

2.5.34 கிரானைட் குறித்து வசூலிக்கப்படும் வருவாய், அதன் ஏற்றுமதி வாய்ப்புடன் ஒப்பிடுகையில், மிகவும் குறைவாக உள்ளதாகத் தெரிகிறது. இவ்வீதங்கள் உயர்த்தப்படலாம். கிரானைட் குறித்து

வசூலிக்கப்படும் தொகையில் 50 விழுக்காடு சுரங்கங்கள் அமைந்துள்ள உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படலாம். எஞ்சிய 50 விழுக்காடு மாநில அளவில் தொகுக்கப்பட்டு, மாநில நிதி ஆணையம் வகுத்த கோட்பாடுகளின் அடிப்படையில் பகிர்ந்தளிப்பதற்காக ஊக்க நிதியில் சேர்க்கப்படலாம்.

இத்தொகையை சம்பந்தப்பட்ட நிருவாகத் தலைமை உள்ளாட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கும். பெரிய கனிமங்களைப் பொறுத்த வரையில், மாநில அரசு பெறும் உரிமத் தொகையில் 25 விழுக்காடு உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படை செயப் வேண்டும். இதில் 50 விழுக்காடு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படலாம். எஞ்சிய தொகை ஏற்கனவே குறிப்பிடப்பட்ட ஊக்க நிதியில் சேர்க்கப்படலாம்.

**2.5.47 உள்ளூர் சாலைகள் மான்யம்**

2.5.47.1 (i) உள்ளாட்சி சாலைகள் மானியத்திற்கான வரைமுறை நிலப்பகுதியின் தன்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதனை மாற்ற வேண்டும். தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலைகள்) மாநில நிதி ஆணையத்திற்கு அண்மையில் தெரிவித்த வீதங்களின்படி சாலைகளின் மேற்பரப்பின் அடிப்படையிலானதாக இருக்க வேண்டும். தற்போதுள்ளபடி, மக்கள் தொகை, சாலைகளின் நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் உள்ளாட்சி சாலைகள் மானியம் தொடர்ந்து வழங்கப்படலாம். தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) குறிப்பிட்டுள்ள திருத்த வீதங்களில் சாலை நீளங்களுக்கான வீதம் பின்பற்றப்படலாம்.

2.5.47.1 (ii) ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரிப்பதற்குத் தேவைப்படும் தொகை, நெடுஞ்சாலைத்துறை அளித்த வீதங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. மோட்டார் வாகன வரியிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்குச் சேர வேண்டிய பங்கினைக் கணக்கிடுவதற்கும் இது கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

2.5.47.1 (iii) மோட்டார் வாகன வரி குறித்த பங்கினை பகிர்ந்தளிப்பதற்காக, பொதுப் பங்கீட்டு நிதித்தொகுப்பில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அதன் பின்னர் தனியாக சாலை மானியம் அளிக்கப்படத்தேவையில்லை. அது வரை இம்மானியம் தொடர்ந்து அளிக்கப்படலாம்.

**குறிப்பு**

இது பொதுப்பங்கீடு நிதித்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளதால் தனி நடவடிக்கை தேவையில்லை.

**2.6.16 வீட்டு வரி**

2.6.16.2 தற்போது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படும் பொதுச்சீராய்வு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படலாம். இதனால் கிராமங்களில் வரி செலுத்துவோரின் வரிச்சுமையில் அதிக உயர்வு இருக்காது. அதே நேரத்தில், வரி விதிக்கும்போது விலை உயர்வினால் கிடைக்கும் பயன்கள் ஊராட்சிகளுக்கு கிடைக்கும்.

**குறிப்பு**

தற்போது உள்ள முறையே தொடர்ந்து நீடிக்கலாம்.

2.6.16.3 நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் உரிய காலத்தில் முன் கூட்டியே வரி செலுத்துவோருக்கு அனுமதிக்கப்படும் அதே சலுகைகள், ஊராட்சிகளில் வீட்டு வரி செலுத்துவோருக்கும் அளிக்கப்படலாம்.

**குறிப்பு**

ஊராட்சிகளில் வசூலிப்படும் வரித் தொகை குறைவு. ஆதலால் இப்பரிந்துரையை ஏற்கத் தேவையில்லை.

2.6.16.4 ஒவ்வொரு முறையும் கேட்பு அறிவிப்பு அனுப்புவதைத் தவிர்ப்பதற்காக நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் கொண்டு வரக் கருதியுள்ள பாஸ் புத்தக முறை ஊராட்சிகளிலும் பின்பற்றப்படலாம். இந்த மாற்றம் பற்றியும், வரியை உரிய காலத்திலும் முன்கூட்டியும் செலுத்துவதால் கிடைக்கும் தள்ளுபடி பயன்கள் பற்றியும் உள்ளூர் மக்களுக்கு எடுத்துரைக்கலாம். இதனால், எழுத்துப்பணி குறைவதுடன், இந்நோக்கத்திற்காக கூடுதல் பணியாளர்கள் நியமிப்பதும் தவிர்க்கப்படுகிறது. தேவைப்பட்டால் தெரிந்தெடுக்கப்பட்ட சில ஊராட்சிகளில் முன் ஆய்வு செய்த பின்னர் இம்முறையை செயற்படுத்தலாம்.

2.6.16.5 ஊராட்சிகளில், குறிப்பிட்ட வார்டுகள் அடங்கிய வசூல் நாளை நிர்ணயிப்பதிலும் வசூல் செய்த இடத்திலேயே இரசீது அளிப்பதிலும், இடர்பாடு ஏதும் இருக்காது. வசூல் செய்வதற்காகத் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கையையும் இது குறைக்கும்.

2.6.16.6 வரி செலுத்தத் தவறுகிறவர்களின் நேர்வில் தான் ஊராட்சி அதிகாரிகள், அவர்களுடன் தொடர்பு கொண்டு விரைவில் வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கும்.

2.6.16.7 மாநகராட்சிகள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்ட அனைத்து நடைமுறைகளும் ஊராட்சிகளிலும் பின்பற்றப்படுவதுடன் வரி விதிப்புப் பட்டியலும் வெளியிடப்படலாம். இதனால் மேல் முறையீடு மறு ஆய்வு வழக்குகளைக் குறைக்க இயலும்.

2.6.16.8 அசையாச் சொத்துக்களை ஜப்தி செய்வதற்கு வகை செய்யும் விதித் துறைகள் ஊராட்சிகளில் நிலுவைகளைக் குறைக்க உதவும்.

**குறிப்பு**

ஊராட்சிகள் கிராமங்களை உள்ளடக்கிய சிறு அலகாகும். வசூலிக்கப்படும் தொகையோ மிகக் குறைவு. ஆதலால் ஊராட்சிகளில் மேற்கூறிய முறையீடுகளைப் பின்பற்றுவது சாத்தியமில்லை.

## 2.6.21 யாத்ரீகர் / சுற்றுலாப் பயணிகள் வரி :

நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் என்ற தலைப்பின் கீழ் இது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. அதில் செய்யப்பட்டுள்ள அனைத்துப் பரிந்துரைகளும் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கும் பொருந்தும்.

**குறிப்பு**

ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு பொருந்தாது.

2.6.23 குறிப்பிட்ட நோக்கங்களுக்கான வேளாண்மை நிலம் மீதான வரி : இந்த வரிக்குப் பதிலாக இப்பகுதியில் உள் சொத்துகள் அனைத்திற்கும் மேம்பாட்டுக் கட்டணங்கள் விதிப்பதற்கு வகை செய்யும் விதித்துறை ஒன்று இயற்றப்படலாம். நிதிகள் தேவைப்படும்போதெல்லாம் ஊராட்சிகள் இக்கட்டணங்களை விதித்து வசூலிக்கலாம். காலி நிலங்களின் உரிமையாளர்களுக்கும் இந்த மேம்பாட்டு கட்டணங்களை விதிக்கலாம். தமிழ்நாடு 1994ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் தக்கவாறு திருத்தப்படலாம்.

## 2.6.27 தண்ணீர் வரி

2.6.27.2 வீடுகளுக்கான குடிநீர்க் குழாய் இணைப்புகளைப் பொறுத்தவரையில் அண்டை நகர்ப்பகுதிகள் அல்லது ஊராட்சி மன்றத்திற்குப் பொருந்துகின்ற அதே வீதத்தில் பயனீட்டாளர் கட்டணங்கள் வசூலிக்கலாம்.

2.6.27.3 வழங்குவதற்குப் போதிய குடிநீர் உள்ள ஊராட்சிகளில் குடிநீர் இணைப்புகள் வீடுகளுக்கு வழங்க அரசு அனுமதிக்கலாம். இதனால் வருவாயும் அதிகரிக்கும்.

2.6.42 மீனளக் குத்தகை

2.6.42.2 பொதுப்பணித்துறை ஏரிகளைப் பொறுத்தமட்டில் விற்பனைத் தொகையில் ஒரு பங்கு ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஊராட்சி மன்றங்கள் குத்தகையை மேற்பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும். இதனால் அளவுக்கு மீறி பயன்படுத்தப்படுவது கண்காணிக்கப்பட்டு அடுத்த குத்தகைகளின் போது அவற்றைத் தவிர்க்க இயலும்.

2.6.42.3 ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடங்கிய பெரிய ஏரிகளைப் பொறுத்த வரையில், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களில் பிரதிநிதிகள் அடங்கியகுழு ஒன்றின் மூலமாக ஏலம் விடப்படலாம். அதன் மூலம் கிடைக்கும் தொகை ஆய்வாளரால், மாவட்ட ஆட்சியாளரால் வரையறுக்கக்கூடிய வீதங்களில் அந்த உள்ளாட்சி மன்றங்களிடையே பகிர்ந்து கொள்ளப்படலாம்.

**குறிப்பு:** இந்தப் பரிந்துரைகள் நகர்புற உள்ளாட்சி மன்றங்களில் மீனள குத்தகை அமுலிலிருக்கும் பகுதிகளுக்கும் பொருந்தும்.

2.6.48 பொருட்காட்சிகளும் விழாக்களும்

2.6.48.1 மாநகராட்சி மன்றங்கள் என்ற தலைப்பின் கீழ் யாத்ரீகர் சுற்றுலாப் பயணி வரி விதிப்பது பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. அவற்றை ஊராட்சிகளுக்கும் கடைப்பிடிக்கலாம்.

2.6.48.2 விழாக்கள் வகையில் ஆகும் செலவில், கோவில்களின் பங்கை அவற்றிடமிருந்து வசூலிப்பது மிகவும் கடினமாக உள்ளது. எனவே, இதற்குப் பதிலாக, யாத்ரீகர் வருகையால் ஆண்டு முழுவதும் கணிசமான வருவாய் ஈட்டுகிற கோயில்களை, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் செய்து கொடுக்கின்ற அடிப்படை வசதிகளுக்காகும் செலவில் ஒரு பங்கை ஏற்கும்படி கோரலாம். திருச்செந்தூரிலிள்ள கோவில், சாலைகள் அமைத்தல் முதலான பணிகளுக்காக தன்னுடைய சொந்த நிதியிலிருந்து நிதி அளிக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள இதர பெரிய கோவில்களும் இது போன்ற முயற்சிகளில் ஈடுபடலாம். அல்லது கோவில் நுழைவுக் கட்டணத்தோடு உள்ளாட்சி மன்றத்திற்காக, கூடுதலாக ஒரு கட்டணம் வசூலித்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கலாம்.

**குறிப்பு**

(1), (2) – 1994 ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 138–ல் இதற்கான அதிகாரம் ஏற்கனவே உள்ளது. ஆகவே தனி நடவடிக்கை தேவையில்லை.

**2.6.57 குடிநீர் வழங்கல் மற்றும் தெருவிளக்கிற்கான மான்யங்கள் :**

பிரித்துக் கொடுக்கத்தக்க பொதுப்பங்கீட்டு தொகுப்பு நிதி தொடர்பான பரிந்துரையின் மீது ஒரு முடிவு எடுக்கப்படும் வரை, தெரு விளக்கு வசதி, குடிநீர் வழங்கல் ஆகியவற்றிற்கு மானியம் வாயிலாக உதவி செய்யும் தற்போதைய நடைமுறையே தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். பொது விளக்கு வசதிக்கான மின் கட்டணங்களும், நீர் ஆதாரங்களைச் செப்பனிடுவதற்கான செலவினங்களும் அரசால் முழுமையாக ஏற்கப்படலாம்.

**குறிப்பு**

பொது பங்கீட்டு தொகுப்பு நிதியில் சேர்க்கப்பட்டுள்ளதால் தனி நடவடிக்கை தேவையில்லை,

2.8.30 கடன் பணிகளும் பொறுப்புகளும்

1. தவணைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கெடுவைத் திருத்தியமைக்கலாம்.
2. கீழ் நிலைகளைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு வட்டி வீதத்தை அரசு குறைக்கலாம்.
3. உள்ளாட்சி மன்றங்களுக்கு குறைவான நிதி ஆதாரங்களே இருப்பதையும் வேண்டுமென்றே தொகை செலுத்தாமல் இருக்கவில்லை என்பதையும் கருத்திற் கொண்டு, அபராத வட்டி தொடர்பான விதியை வலியுறுத்தாமல் இருக்கலாம்.
4. கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டங்களைப் பொறுத்தவரை பராமரிப்புச் செலவில் சேர்க்கப்பட்டுள்ள அதிக அளவிலான நிர்வாகச் செலவைத் தவிர்க்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கோரப்படும் செலவுத் தொகையை மீண்டும் கணக்கிடலாம்,
5. செலுத்தப்படாமல் உள்ள பாக்கித் தொகைக்கு கூடுதல் வட்டி இன்றி, நிலுவைத் தொகை வகையில் ஒரு தவணையோடு, நடப்பு ஆண்டுத் தொகையைச் செலுத்துவதன் மூலம், கடன் பாக்கியைக் கொடுத்துத் தீர்க்க உள்ளாட்சி மன்றங்கள் அனுமதிக்கப்படலாம்.
6. அகவிலைப்படி வழங்குவது போன்று உள்ளாட்சி மன்றங்கள் செய்த சில செலவுகளை, அரசு ஈடுசெய்ய ஒப்புக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஈட்டுத் தொகை, பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் உள்ளது. அகவிலைப்படி மானிய நிலுவைத் தொகைகளை அரசு அனுமதித்து, உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வர வேண்டிய கடன்களுக்கான சரிகட்டிக் கொள்ளலாம்.
7. விற்பனை வரி மீதான மேல்வரி, உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல்வரி, சுரங்கங்கள் கனிமங்கள் ஆகிய வகையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு சேர வேண்டிய வருவாய் பங்கு ஒதுக்கீட்டுத் தொகை, பல ஆண்டுகளாக சரிக்கட்டப்படாமல் அரசுக் கணக்கில் சேர்ந்து கொண்டே இருக்கின்றன என மாநில நிதி ஆணையத்தின் கவனத்திறகுக் கொண்டு வரப்பட்டது. மேற்சொன்ன தொகைகளையும் அனுமதித்து இயன்ற இடங்களிலெல்லாம், உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வர வேண்டிய கடன் பாக்கிளுக்காக சரிக்கட்டிக் கொள்ளலாம்.

8. வருங்காலத்தில் அனைத்து வருவாய்களும் உரிய காலத்தில் சரிக்கட்டப்படுவதை அரசு உறுதி செய்தால் நடப்பு ஆண்டுத் தொகையுடன், காலங்கடந்த பாக்கி வகையில் ஒரு தவணையையும் கட்டாயமாகச் செலுத்த வேண்டும் என வற்புறுத்தலாம்.

9. உள்ளாட்சி மன்றங்களின் கடன் பொறுப்பைக் குறைப்பதற்காக அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகைகள் சரிக் கட்டியப் பின்னர், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணைகளைத் தகுந்த முறையில் திருத்தியமைப்பது பற்றி அரசு பரிசீலிக்கலாம். அபராத வட்டியைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வது உட்பட வட்டியில் கழிவும் அளிக்கலாம்.

10. ஆதாய நோக்கிலான திட்டங்களைப் பொறுத்த வரை, உள்ளாட்சி மன்றங்கள், தங்களுடைய கடன் பொறுப்பைத் தீர்ப்பதற்கு ஏதுவாக, அங்காடி நிலவரத்திற்கேற்ப, பொருத்தமான வாடகை, குத்தகைத் தொகைகளை நிர்ணயித்துக் கொள்ள அவற்றுக்கு உரிமை அளிக்கலாம்.

11. திட்டங்களைச் செயல்படுத்த, வரையறுத்த கால அளவுக்கும் மேலாக அவகாசம் எடுத்துக் கொள்வதன் காரணமாக திட்டச் செலவு உயர்வதற்கு, உள்ளாட்சி மன்றங்களின் திட்டங்களைச் செயற்படுத்தும் தொழில் நுட்ப முகவரமைப்புகள் மீதும் கூட்டுப் பொறுப்பு நிர்ணயிக்கலாம். வரையறுத்த அளவுக்கும் அதிகமாக அவகாசம் பிடித்த நேர்வுகளில், தம்முடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு**

இப்பரிந்துரைகள் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பொருந்தாது.